<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.எஸ்.நாகராஜன், எம்.எல்,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**<u>அ.வ.எண். 455/2019</u>** **<u>நாள்:15.12.2022</u>**

**<u>வா.சா.1:</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கே.நடராஜன் | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**<u>குறுக்கு விசாரணை:</u>**

<u>பிரதிவாதி தரப்பில்</u>

எனது சொந்த ஊர் அம்மாபட்டி கிராமம் என்றால் சரிதான். என்னை ஏகேகே நடராஜன் என்று அழைப்பார்கள் என்றார் ஆமாம். எனக்கு என்னதொழில் என்றால் விவசாயம் தான். வாசாஆ.1 கிரைய உடன்படிக்கையில் வரைவு வாசாஆ.2 ஆக செய்யப்பட்டு உள்ளதில், இந்த ஒப்பந்ததத்திற்கு காலநீடிப்பு இல்லை என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வாசாஆ.2 ல் கிருஸ்ணன் என்பவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். கிருஷ்ணனின் மகன் பெயர் சுனில் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் 2 வது பக்கத்தில் கடைசி 6 வரிகளில் "2016 ம் வருடம் செப்டம்பர் மாதம் 17 ம் தேதிக்குள் நாளது தேதியில் 2 இலக்கமிட்டவர் செலுத்தியுள்ள அட்வான்ஸ் தொகை போக பாக்கி கிரைய தொகை ரூ. பனிரெண்டு லட்சத்தை 2 இலக்கமிட்டவர் 1 இலக்கமிட்டவருக்கு செலுத்தி 2 இலக்கமிட்டவர் தன் செலவில் கிரையம் பெற்று கொள்ளவேண்டியது என்றும் தவறினால் மேற்படி அட்வான்ஸ் தொகையை 2 இலக்கமிட்டவர் இழந்து விடுவதுடன் மேற்படி கெடுவிற்கு பின் இக்கிரைய ஒப்பந்தமும் செல்லதக்கது அல்ல என்று சொல்லப்பட்டுள்ளது" என்றால் சரிதான். பதில் உரையில் கால நீடிப்பு பிரதிவாதியால் செய்யப்படவில்லை

என்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று மறுத்திருக்கிறேன் என்றும் அதை பொறுத்து நான் மேல் நடவடிக்கை எடுத்து இருக்கிறேனா என்றால் இல்லை.(பிரதிவாதி தாமே குறுக்கு விசாரணை செய்தார்). நான் மேற்படி பிரதிவாதியின் கையெழுத்தை நிருபணம் செய்வதற்கு நிபுணர் ஒப்புதலுக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு பணப்பிரச்சினை எதுவும் இல்லை என்றும் கால நீடிப்பு 18 மாதம் போடவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் கேட்டதால் போட்டேன். எதற்காக 18 மாதம் என்றால் ஆவணம் வேறு பைனான்ஸ்சில் இருப்பதாக பிரதிவாதி சொன்னதால் போடப்பட்டது. சட்ட அறிவிப்பில் இதை பொறுத்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

(பிரதிவாதி வங்கி பரிவர்த்தனை குறித்து சில ஆவணங்கள் தான் பெற்று குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று தெரிவித்ததால் குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டது),

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஒம்/-எஸ்.நாகராஜன்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.(பொறுப்பு)